செய்தி வெளியீடு எண்: 676 நாள்:03.10.2019

# செய்தி வெளியீடு

## காந்தி ஜெயந்தி முன்னிட்டு தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்காத நிறுவனங்கள் மீது தொழிலாளர் துறை அதிரடி நடவடிக்கை

தொழிலாளர் துறையால் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைச் சட்டம் 1958ன் படி தேசிய விடுமுறை நாட்களான குடியரசு தினம், தொழிலாளர் தினம், சுதந்திர தினம் மற்றும் காந்தி ஜெயந்தி ஆகிய நான்கு நாட்களும், இது தவிர ஐந்து பண்டிகை விடுமுறை நாட்கள் ஆக மொத்தம் ஒன்பது நாட்கள் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு விடுமுறை அளிக்காத கடைகள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் தோட்ட நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களை அன்றைய தினம் பணிக்கு அமர்த்தப்பட்டால் அவர்களுக்கு இரட்டிப்பு சம்பளம் அல்லது மாற்று விடுப்பு அனுமதித்து உரிய படிவத்தில் சம்மந்தப்பட்ட தொழிலாளிக்கு அறிவிப்பு அளித்து அதன் நகலினை சம்மந்தப்பட்ட ஆய்வர்களுக்கு அனுப்பி விடுமுறை தினத்தன்று நிறுவனத்தில் அதனை காட்டி வைக்க வேண்டும்.

தொழிலாளர் ஆணையர் திரு. இரா. நந்தகோபால், இ.ஆ.ப., அவர்களது அறிவுரையின் பேரில் 02.10.2019 காந்தி ஜெயந்தி தினத்தன்று தமிழ்நாடு தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை சட்டத்தின் விதிமுறைகளை பின்பற்றாத நிறுவனங்கள் மீது ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டதின் பேரில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் சம்பந்தப்பட்ட அமுலாக்க அலுவலர்களால் கடைகள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் சிறப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி சிறப்பாய்வின் பொழுது சென்னை மண்டலத்தில் 893 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 294 கடைகள் மற்றும் நிறுவனங்கள் 235 உணவு நிறுவனங்கள், 37 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் உள்ளிட்ட 566 நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டது.

கோவை மண்டலத்தில் 696 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 180 கடைகள் மற்றும் நிறுவனங்கள், 190 உணவு நிறுவனங்கள், 34 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், 2 தோட்ட நிறுவனங்கள் உள்ளிட்ட 406 நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டது.

திருச்சி மண்டலத்தில் 644 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 143 கடைகள் மற்றும் நிறுவனங்கள், 109 உணவு நிறுவனங்கள், 21 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், 6 தோட்ட நிறுவனங்கள் உள்ளிட்ட 279 நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டது

மதுரை மண்டலத்தில் 665 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 196 கடைகள் மற்றும் நிறுவனங்கள், 119 உணவு நிறுவனங்கள், 30 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், உள்ளிட்ட 345 நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டது

தமிழ்நாடு தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை சட்டம் மற்றும் விதிகளை மீறிய செயலுக்காக தமிழகத்தில் உள்ள 813 கடைகள் மற்றும் நிறுவனங்கள் மீதும், 653 உணவு நிறுவனங்கள் மீதும், 122 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் மீதும், 8 தோட்ட நிறுவனங்கள் மீதும் ஆக மொத்தம் 1596 நிறுவனங்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**